பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 48

திங்கட்கிழமை
13 ஜனவரி 2025

மார்கழி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# அநுரவின் சீனப் பயணத்தில் 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

கொழும்பு, ஜனவரி 13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீனப் பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே ஏழு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன என்று தெரியவருகின்றது. 11



## கடலுக்குச் சென்ற மீனவர் உயிரிழப்பு

யாழ்.,ஜன.13

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கடற்றொழிலுக்குச் சென்றபோது உயிரிழந்துள்ளார். குருநகரைச் சேர்ந்த 58 வயதான நபரே உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற இவருக்கு நேற்று உடல் சுகவீனம் 11

## மேற்கு நாடுகளும் அநுரவுக்கு அழைப்பு

கொழும்பு, ஜன.13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அமெரிக்கப் பயணத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி அநுரகுமார 11

### வன்னித் தேர்தல் மாவட்டத்தில்

## தேர்தல் கடமைக் கொடுப்பனவு வழங்கப்படாமல் இழுத்தடிப்பு!

### அரச உத்தியோகத்தர்கள் விசனம்

வவுனியா, ஜன.13

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரியவருகின்றது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கடமையில் ஈடுபட்டமைக் 11



## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.13

ஒரு கிலோக்கிராம் 375 கிராம் கேரளக் கஞ்சாவை உடை 11

## தமிழக மீனவர்கள் எண்மர் எல்லைதாண்டியதால் கைது!

யாழ்ப்பாணம், ஜன.13

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிவந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 8 பேர் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. மன்னார், நாச்சிக்குடாக் கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது 11



## நிதி நிறுவனத்தில் மோசடி சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.13

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் மோசடியில் ஈடுபட்ட சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 11



## இந்திய மீனவர்கள் விடுவிப்பை வலியுறுத்தி ஸ்டாலின் கடிதம்!

சென்னை, ஜன.13

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களையும் விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக 11

## உள்ளூராட்சிமன்றத் தேர்தல் 80,000 வேட்புமனுக்கள் இரத்து

» 02




'இந்தியாவுக்கு போட்டு வந்து பஸ், ஓட்டோ டெக்கிரேசனை பிடுங்கின மாதிரி உங்க போட்டு வந்து என்னத்தை பிடுங்கப்போறாரோ?'

## கடற்றொழில் சட்டங்களை சரியாகச் செயற்படுத்துக!

### வலியுறுத்துகிறது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாசம்

யாழ்ப்பாணம், ஜன.13

வெளிநாட்டவர்கள் சிலர் தொண்டைமானாறுக் கடற்கரையில் ட்ரோன் மூலம் காணொலி பதிவுசெய்கின்றனர். வெளிநாட்டவர்கள் எமது பிரதேசத்தில் என்ன செய்கின்றார்கள்? இந்த நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று தெரிவித் 11

## கச்சானை உட்கொண்ட 1½ வயதுக் குழந்தை சாவு

யாழ்ப்பாணம், ஜன.13

மூச்சுக்குழாயில் கச்சான் சிக்கியதால் ஒன்றரை வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் நடந்துள்ளது.

சுன்னாகம், ஐயனார் வீதியைச் சேர்ந்த சசிதரன் டனியா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை கச்சானை உண்ட குழந்தைக்குப் புரக்கேறி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல் 80,000 வேட்புமனுக்கள் இரத்து



**கொழும்பு, ஜன. 13**

**உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன.**

கடந்த 2023ஆம் ஆண்டின் மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல், கடந்த அரசாங்கத்தினால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னைய வேட்பு மனுக்களை இரத்துச் செய்தும், புதிதாக வேட்பு மனுக்களைக் கோரும் வகையிலும் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், நாடெங்கிலும் உள்ள 320 உள்ளூராட்சி மன்றங்களின் 8711 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக, எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் ஒருகட்டமாக கடந்த ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 80 ஆயிரத்து 670 வேட்பு மனுக்கள் தற்போது இரத்துச் செய்யப்படவுள்ளன. தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ச-இ)

## சிறீதரனுக்கு அழுத்தம் சிவஞானம் கண்டிப்பு

கொழும்பு, ஜன. 13

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் இடம்பெறவுள்ள நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இந்தியா செல்லச் சென்றபோது அங்கே விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் பயணத்துக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருக்கும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரை இவ்வாறு நடத்தியது ஏற்புடையதன்று. அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவராக இருப்பதுடன் அவர் இலங்கை நாடாளுமன்றில் மூன்றாவது பெரிய கட்சியாகவுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்குகின்றார். இந்தச் சம்பவம் ஒரு பழிவாங்கும் சம்பவமாக இருக்கலாம் என்றே எமக்குத் தோன்றுகிறது. இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாத வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு அநுர அரசாங்கத்துக்கு உண்டு- என்றார். (ச-இ)

## ஐ.ம.சவிலிருந்து விலகும் எரான்

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய மக்கள் சக்தியின் மொரட்டுவத் தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து எரான் விக்ரமரத்ன விலகவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் அண்மைக்காலமாகக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு எதிரான மனோநிலை அதிகரித்து வருகின்றது. அதனால் சிலர் கட்சிச் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருக்கத் தலைப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எரான் விக்ரமரத்ன ஐக்கிய மக்கள் சக்தி மொரட்டுவத் தொகுதி அமைப்பாளர் பொறுப்பில் இருந்து விலகவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பஸிலுக்கு 'செக்' வைக்க அநுர அரசாங்கம் தீவிரம்

கொழும்பு, ஜன. 13

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச தொடர்பான விசாரணைகள் தற்போது மிகவும் இரகசியமான முறையில் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பஸில் ராஜபக்சவின் சொத்துகள், அவற்றை முதலீடு செய்துள்ள இடங்கள், சேமிப்புகள், வீடு உள்ளிட்ட அசையாச் சொத்துகள் குறித்தே புலனாய்வுப் பிரிவினர் மிகத் தீவிரமாகத் தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளனரென்த் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் ஒருகட்டமாக பஸில் ராஜபக்சவுடன் கடந்த காலங்களில் நெருக்கமாகச் செயற்பட்ட வர்த்தகத் துறையினர், அதிகாரிகள் போன்றோரிடம் அண்மைக் காலமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. சர்வதேச பிடியாணை பெறக்கூடிய வகையில் மிக விரைவில் பஸில் ராஜபக்சவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுப்பதற்கான ஆவணங்கள் சேகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## 4 நீதியரசர்கள் பதவிப்பிரமாணம்

கொழும்பு, ஜன. 13

புதிதாக நியமிக்கப்பட்ட நான்கு உயர்நீதிமன்ற நீதியரசர்களும் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.எம்.எஸ்.ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி. அபேகோன், மற்றும் எம்.எஸ்.கே.பி.விஜேரத்ன ஆகியோரே உயர் நீதிமன்ற நீதியரசர்களாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். (ச-இ)

## ஐ.தே.கட்சியை கட்டியெழுப்புக

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 13

இலங்கையின் பழமையான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை நிச்சயம் கட்டியெழுப்பவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டெழ வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். அந்தக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீள இணைய வேண்டும். இலங்கையின் பழமையான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பலமடைய வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற வகையில் நாம் எமது அரசியலைச் செய்வோம். ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையில் அவர்கள் அரசியலைச் செய்வதன் ஊடாக கட்சிகள் வலுவடையும்போது ஜனநாயகமும் பலப்படும் என்றும் குறிப்பிட்டார். (ச-44)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 12.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0422 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| V | 0 7 3 0 5 4 |

### Super Ball DLB

| திகதி | தினம் |
|---|---|
| 12.01.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2688 | Q | 11 41 43 49 |

### சனிதா DLB

| திகதி | தினம் |
|---|---|
| 12.01.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| W | 21 48 52 63 | 4849 |

### SASIRI DLB

| திகதி | தினம் |
|---|---|
| 12.01.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0599 | 14 25 50 |

### லக்ன ராசி DLB

| திகதி | தினம் |
|---|---|
| 12.01.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 09 15 42 52 | 4400 |

### KAPRUKA DLB

| திகதி | தினம் |
|---|---|
| 12.01.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| K | 19 | 24 57 65 69 | 1864 |

### அத கோடிபதி DLB

| திகதி | தினம் |
|---|---|
| 12.01.2025 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| F | 10 33 65 68 | 2514 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கறுப்புப்பட்டியலிலுள்ள

# நிறுவனமொன்றிடம் மருந்து கொள்வனவு

கொழும்பு, ஜன. 13

நோயாளிகளின் வாய்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் 'க்ளோஎக்சடின்' எனும் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பங்களாதேஷ் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில்,

குறித்த நிறுவனம் மீதான சர்ச்சையையும் பொருட்படுத்தாது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜூன் மாதம், 2 இலட்சத்து 70 ஆயிரம் நோயாளிகளின் வாய்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் 'க்ளோஎக்சடின்' மருந்துப் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காக, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் விலை மனுவைக் கோரியிருந்தது. அதன்படி மிகக் குறைந்த ஏலத்தொகையை முன்வைத்த நிறுவனத்துக்கு விநியோக ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிறுவனம் கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திடமி ருந்து பெறப்படும் மருந்துகளால் நோயாளர்களுக்கும் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமாயின் அதற்குத் தற்போதைய சுகாதார அமைச்சரே பொறுப்புக் கூறவேண்டும் - என்றார். (ச-இ)

## கடலில் மிதந்துவந்த கேரளக் கஞ்சா மீட்பு

புத்தளம், ஜன. 13

புத்தளம், கற்பிட்டி கப்பலடி கடற்பகுதியில் இருந்து ஒருதொகை கேரளக் கஞ்சா நேற்று முன்தினம் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா 90 கிலோ 45 கிராம் எனவும் அதன் சந்தைப் பெறுமதி 36 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)



## கூட்டுறவுச் சங்கத்தினருடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது மீனவர்கள் தமது வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து எடுத்துரைத்தனர். அதனையடுத்து குறித்த கடற்றொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபடும் கடற்கரைக்கு, தூதுவர் நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு இழுவைமடிகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிலை குறித்தும் கேட்டறிந்தார். அதே வேளை கடற்றொழிலாளர் சங்கப் பிரதி நிதிகளால் தூதுவருக்கு மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (ச-125)

## இறக்குமதி வாகனங்களுக்கு வரி விதித்து வர்த்தமானி

கொழும்பு, ஜன. 13

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள வாகனங்களுக்கான இறக்குமதி வரிவீதம் அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.


அதற்கமைய உற்பத்தித் திகதியிலிருந்து 10 வருடங்களுக்கு மேற்படாத வாகனங்களுக்கு 200 இலிருந்து 300 வீதம் வரை வரி விதிப்பதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். (ச-இ)

## பல்துறை ஆளுமை அந்தனி ஜீவா மறைவு



கொழும்பு, ஜன. 13

எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், தொழிற்சங்கச் செயற்பாட்டாளர், இதழாளர், பதிப்பாளர், சிறுகதை ஆசிரியர், முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட அந்தனி ஜீவா தனது 80 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். இவர் கலையையும், இலக்கியத்தையும் வெறும் பொழுதுபோக்குக்காக இல்லாமல், சமூக விழிப்புணர்வுக் கான ஊடகமாகக் கருதி தனது பணியை மேற்கொண்டு வந்தவர். கலாபூஷணம் அந்தனி ஜீவா, மலையக இலக்கியங்கள் தொடர்பில் ஆய்வு செய்து பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்துடன், நாடகத்துறையில் நாட்டம் கொண்ட அவர், பல்வேறு நாடகங்களை எழுதியுள்ளதுடன், பல மேடை மற்றும் வீதி நாடகங்களையும் அரங்கேற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## பலாலியில் இறந்த நிலையில் கரையொதுங்கிய ஆமை

யாழ்ப்பாணம், ஜன. 13

பலாலி சந்திப்பகுதியில் உள்ள கடற்கரையில் இறந்த நிலையில் ஆமையொன்று கரையொதுங்கியுள்ளதாக பலாலி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கடலாமை மூன்று அடி நீளம் உடையதாகக் காணப்படுகிறது.

தற்பொழுது பெய்துவரும் மழை காரணமாகக் குறித்த ஆமை பாறையில் மோதுண்டு இறந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-23)

## புதினம் தெரியுமோ

அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபமாம். ஆனால் அதிகாரம் அவைக்கு வராட்டி ஏதும் குற்றங்குறை சொல்லிக் கொண்டே இருப்பினம். அதோட மற்றவைக்கு கிடைக்கிறதெல்லாம் தங்களுக்கும் கிடைக்கோணும் எண்டு அலாதிப்பட்டு அலைவினம். அப்பிடி வீட்டுக்கட்சிக்குள்ள உந்தச் சடையாரும், உடையாரும் ஏட்டிக்குப் போட்டியா நடக்கிறதைப் பார்த்து அழுகிறதோ சிரிக்கிறதோ எண்டு தெரியாமல் கிடக்கு.

பக்கத்து நாட்டுக்காரரோட சடையார் நல்ல நெருக்கம். கடைசிச்சண்டையில எங்கட சனம் இந்தளவு சாகிறதுக்கும், இயக்கம் தோக்கிறதுக்கும் அந்தநேரத்தில பக்கத்து நாட்டில பிரதமரா இருந்த 'தலைப்பாக்கட்டுக் காரரும்' ஒரு காரணம் . அந்தத் தலைப்பாக்கட்டுக்காரர் கிட்டடியில செத்தவர். அவருக்கு இஞ்சயிருந்து ஒருத்தரும் ஒருசொட்டுக் கண்ணீரும் விடேலை. ஆனால் சடையார் மட்டும், எம்பஸிக்குப் போய், அங்க தலைப்பாக்கட்டுக்காரருக்கு அஞ்சலி செலுத்தினவர். அந்தளவுக்கு அவருக்கும் பக்கத்துநாட்டுக்காரருக்கும் நல்ல பிணைப்பு. அந்தப் பிணைப்பில தமிழகத்தில நடக்கிற அயலகத் தமிழர் தினத்தில இஞ்சையிருந்து கடற்றொழில் அமைச்சரையும், ஹக்கீமையும், சடையாரையும் விருந்தினராக் கூப்பிட்டவை. நேற்றுத்தான் அந்த நிகழ்வு.

இப்பிடித் தொட்டதுக்கும் சடையாரைத் தூக்கிப் பிடிக்கிறது உடையார் கொம்பனிக்குப் பிடிக்கேலை. எதுக்கெடுத்தாலும் அவருக்குத்தான் அழைப்போ? எண்டிட்டு , அழையா விருந்தாளியளா உடையார் தன்ர மட்டக்களப்புக் கைத்தடியையும் கூட்டிக்கொண்டு முதல்நாளே பக்கத்து நாட்டுக்குப் போட்டாராம். போனவை சும்மா இருக்கேலை. அங்க உள்ள சில அரசியல்வாதியளோட நிண்டு படமெடுத்து மீடியாக்களுக்கும் அனுப்பி ' எங்களையும் பக்கத்துவீட்டுக்காரர் கூப்பிட்டவை' எண்டு கதையைப் பரப்பத்தொடங்கிட்டினம். அவை போனபிறகுதான் அங்க போறதுக்காக உடையார் எயார்போர்ட்டுக்கு போயிருக்கிறார். ஆனால் சடையாருக்கு பழைய பாஸ்போர்ட்டில ஒரு சிக்கல், அதால சி.ஐ.டி. தடை போட்டிருக்கு எண்டு கனநேரம் பிய்ச்சுப்பிடுங்கிப் போட்டுத்தான் போகவிட்டிருக்கினம். இத்தனைக்கும் போனமாதம்தான் சடையார் கனடாக்குப் போட்டு வந்தவர். அப்ப இல்லாத பாஸ்போர்ட் பிரச்சினை இப்பமட்டும் எப்பிடி வந்தது?

'சடையாரின்ர பாஸ்போர்ட்டில சிக்கல்' எண்டு உடையாரின்ர கைத்தடிதான் போட்டுக் குடுத்ததெண்டு ஒரு கதை அடிபடுகுது. அப்பிடி சி.ஐ,டி, பிரச்சினையால சடையாரை பக்கத்து நாட்டுக்குப் போகவிடாமல் மறிச்சால், அவருக்குப் பதிலா உடையார் அயலகத் தமிழர் தினத்துக்கு விருந்தினராப் போகலாமெண்டுதான் அவரின்ர கைத்தடி இப்பிடியொரு சாணக்கிய வேலையைப் பார்த்தவர் எண்டு சிலர் சொல்லுகினம். அடுத்தவனை விழுத்த காக்கைவன்னியனா மாறுறது நல்லதுக்கில்லை கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சகோதரர் தொடர்பான முக்கிய பொறுப்பு ஒன்றை ஏற்க நேரிடும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் இருக்கும் ஆலயங்களை தரிசிக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன்வாங்கவும் நேரிடும்.

**கடகம்:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** வயிறு தொடர்பான பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள்.


**விருச்சிகம்:** குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவன் மனைவிக்கி டையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக் க்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனு சரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக் கரையும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்து ழைப்புத் தருவார்.

**மகரம்:** மனதில் உற்சாகம் உண்டாகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். வாழ்க்கைத்துணை வழியில் சுபச் செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவையை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள்.



# விவேகானந்தரின் பிறந்ததின நிகழ்வு

வவுனியா, ஜன. 13

சுவாமி விவேகானந்தரின் 162 ஆவது பிறந்ததின நிகழ்வு, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மற்றும் வவுனியா நகரசபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள நினைவுத்தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போது அவரது சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் ப.சத்தியநாதன், நகரசபைச் செயலாளர் அ.பாலகிருபன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்க தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-

# மனைவியின் காதை வெட்டியவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பகுதியில் மனைவியின் காதை வெட்டியவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது. கணவனின் சித்திரவதைக்குள்ளான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது உறவினரின் வீட்டில் வசித்துவந்த நிலையில் அங்கு கடந்த ஒக்ரோபர் மாதம் சென்ற கணவன் மனைவியின் காதை வெட்டிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார். பாதிக்கப்பட்ட பெண் சிகிச்சைக்குப் பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு வழங்கிய நிலையில் கடந்த வியாழக்கிழமை சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபருக்கு எதிராக வேறு சில முறைப்பாடுகள் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் காணப்படுகிறது என்றும் சந்தேகநபர் இதற்கு முன்னரும் மனைவியின் தலை மற்றும் காலை உடைத்து சித்திரவதைகளை புரிந்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-27)



# நினைவுத்தூபியில் சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் நினைவுத்தூபி வளாகம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை துப்புரவுசெய்யப்பட்டது. தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்தின் நெறிப்படுத்தலில் தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் செயற்பாட்டாளர்களால் இந்தச் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (ச-66-20)



# யாழ். சிறைச்சாலையில் 'தூய இலங்கை' திட்டம் !

யாழ்ப்பாணம் , ஜன. 13

'தூய இலங்கை' வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.சிறைச்சாலையில் உள்ளக மற்றும் வெளியகப் பகுதிகளில் சுத்தம் செய்யும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. யாழ். சிறைச்சாலையின் அத்தியட்சகர் மற்றும் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி உள்ளிட்டோரின் தலைமையின் கீழ் இந்த நடவடிக்கை இடம்பெற்றது. இவ்வாரம் முழுவதும் குறித்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ச-22,158)

# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம் , ஜன.13

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட 174 ஆசிரியர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்லூரியின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார். (ச-22,159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அறியாமை என்பது கடவுளின் சாபம்,
அறிவு என்பது நாம் சொர்க்கத்திற்குப்
பறப்பதற்கான சிறகு.

—வில்லியம் ஷேக்ஸ்பியர்—


# ஒற்றுமையில் வேற்றுமை


அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது முதல் ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்பது வரையாக தமிழில் உள்ள பலமுதுமொழிகள் ஒற்றுமையைப் பற்றிச் சொன்னபோதும், 'கெடுகிறோம் பார் பந்தயம் பிடி' என்று எப்போதும் பிரிவின் பாதையிலேயே எமது இனம் பயணித்துக்கொண்டிருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய தமிழ்ப்பகுதிகள் யாவற்றிலும் தேசிய மக்கள் சக்தி வாகை சூடியதால், தமிழ் அரசியல் கட்சிகள் மீண்டும் ஒற்றுமைக் கோஷத்தைக் கையில் எடுத்துள்ளன. வெறும் உதட்டளவில் ஒற்றுமை பற்றிச் சொல்லி ஏமாற்றாமல் உண்மையாகவே தமிழ்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு, தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கவேண்டும் என்பதே எல்லோரினதும் அவா. ஆனால் மக்களின் இந்த ஏக்கத்தை தமிழ் அரசியல் கட்சிகள் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. இப்போது மேலுயரத் தொடங்கியிருக்கும் ஒற்றுமைக் கோஷத்தின் பின்னணியிலும் சில அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட நலன்களும் ஒளிந்திருக்கவே செய்கின்றன. அத்தோடு இவ்வாறு கட்சிகள் ஒன்றுபட்டால், அது தங்கள் கட்சியின் சின்னத்தின் கீழேயே ஒன்றுபட வேண்டும் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. பிளவை அதிகரிக்கும் வேலைகளைச் செய்துகொண்டே ஒற்றுமை , ஒற்றுமை என்று கூவியழைப் பதால் மட்டும் ஒற்றுமை வந்துவிடுமா என்ன?

தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோரின் நினைவேந்தல் கடந்த 10 ஆம் திகதி , முற்றவெளியில் உள்ள நினைவுத்தூபியில் மூன்று தரப்புகளால் வெவ்வேறு நேரங்களில் நடத்தப்பட்டது. இவ்வாறு ஒரு நினைவேந்தலைக்கூட ஒற்றுமையாக, ஓரணியாக நடத்தமுடியாத அரசியல்கட்சிகள் அந்த நினைவுத்தூபிக்கு முன்பாக நின்றுகொண்டு 'நாங்கள் எல்லோரும் கட்சி பேதத்தை மறந்து ஒற்றுமைப்படவேண்டும்' என்று பாடம் எடுத்தமைதான் ஆகப்பெரிய நகைமுரண். தமிழாராய்ச்சிப் படுகொலை என்பது எமதினத்தின் மீதான அடக்குமுறைகளின் ஆரம்பப்புள்ளிகளில் ஒன்று. எந்த அரசியல் சாயமுமில்லாமல்,ஒரு பெரும் எழுச்சியாக இந்த நினைவேந்தலை வருடாந்தம் அனுஷ்டிக்கவேண்டும். அப்போதுதான் எமது அடுத்த சந்ததிக்கு இந்தப் படுகொலைகளின் காத்திரமும், கனதியும், துயரும் புரியும். ஆனால் நாமென்ன செய்கிறோம்? காலை 8 மணிக்கு ஒரு கட்சி, 10 மணிக்கு இன்னொரு கட்சி, 12 மணிக்கு வேறொரு கட்சி என மூன்றுவேளை, மூன்று தரப்புகளாகப் பிரிந்து சென்று, அஞ்சலி செய்வதில் கூட அரசியல் செய்கின்றோம்? இப்படி அரசியலை உள்நோக்கமாகக்கொண்டு செய்யும் அஞ்சலியை விட, அந்த நினைவேந்தலைச் செய்யாமல் விடுவதே மேலானது. அதைவிடத் தனித்தனியே மூன்று பிரிவுகளாக நினைவேந்தலைச் செய்துகொண்டே ஒற்றுமைப்படுவோம் என்று அழைப்பு விடுப்பது அபத்தத்திலும் அபத்தமானது.

தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு பல தசாப்தங்களாக எட்டாக்கனியாக இருப்பதற்கு சிங்களப் பேரினவாத அரசு எவ்வளவு காரணமோ அதற்குச் சற்றும் குறையாத பங்கு இந்தத் தமிழ்க்கட்சிகளையே சேரும். தமிழ் மக்களின் உரிமைக்காகக்குரல் கொடுப்பதாக, ஜனநாயக வழியில் போராடுவதாக மார்தட்டிக்கொள்ளும் தமிழ்க் கட்சிகள் உண்மையில் தங்கள் பதவிகளையும், சலுகைகளையும்பெறுவதிலும், தக்கவைப்பதிலும் தான் அக்கறையாக இருக்கின்றனவே தவிர மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று எள்ளளவும் எண்ணுவதில்லை. அப்படி மக்களின் பிரச்சினையைத் தீர்த்தால் அரசியல்வாதிகள் எதைவைத்து அரசியல் செய்வது? எதைச்சொல்லி வாக்குக் கேட்பது? எனவே தங்களின் அரசியல் இருப்புக்காக இனப்பிரச்சினையை நீடிக்கச் செய்வதையே தமிழ் அரசியல்வாதிகளும் விரும்புகின்றனர். அதனால் ஒவ்வொரு காலத்துக்கும் ஏதேனும் ஒரு விடயத்தைச் சொல்லி மக்களை ஏமாற்றிவருகின்றனர். ஆனால் அந்த ஏமாற்றுவேலைகளும்,பூச்சுற்றுதல்களும் அதிககாலம் நீடிக்கப்போவதில்லை என்பதையே கடந்த தேர்தல் முடிவுகள் காட்டின. அதன்பின்னர்கூட இந்தத்தமிழ் அரசியல்வாதிகள் பாடம் கற்றுக்கொள்ளவில்லையென்பதே உண்மை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# வைப்புத்தொகை வரி 10 சதவீதமாக உயர்வு

**கொழும்பு, ஜன. 13**
**இலங்கையில் அனைத்து வங்கிகளிலும் வைப்புச்செய்யப்பட்டுள்ள வைப்புத்தொகைகளுக்கு விதிக்கப்படும் பிடித்தம் செய்யும் வரியை அரசாங்கம் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்துள்ளது.**

மத்தியவங்கி ஆளுநரின் தகவலுக்கமைய, இலங்கையில் வங்கிகளில் 65 மில்லியன் ரூபா வைப்புத்தொகைகள் உள்ளன. அவற்றில் சுமார் 1.7 ட்ரில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது.
இந்தநிலையில் நிலையான வைப்புகளுக்கான பிடித்தம் செய்யும் வரி அதிகரிக்கப்பட்டுள்ளமையால், அதிகளவான வாடிக்கையாளர்கள் வங்கியில் இருந்து பணத்தை மீளப்பெற்றுக்கொள்கின்றனரெனத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு காரணமாக வங்கிகள் மட்டுமன்றி பிரபல நிதி நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை வைப்புச்செய்யப்பட்ட சுமார் 300 மில்லியன் ரூபா பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகப் பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக பங்குச் சந்தையில் கணிசமான வளர்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-இ)

# 9 நாள்களுக்குள் 70,000 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜன. 13
2025ஆம் ஆண்டின் முதல் ஒன்பது நாள்களுக்குள் மட்டும் 70 ஆயிரத்து 944 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.
இவர்களில் கூடுதலான சுற்றுலாப்பயணிகள் இந்தியாவில் இருந்தே வருகைதந்துள்ளனர்.
ரஷ்யா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து கூடுதலான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# 8,000 தொன் அரிசி துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு, ஜன. 13
இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 8 ஆயிரம் தொன் அரிசி சுங்கப் பரிசோதனைகளுக்காகத் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் நோக்குடன் கடந்த டிசெம்பர் 4ஆம் திகதி தொடக்கம் அரிசி இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட அவகாசம் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளது. அதன்படி இறக்குமதி செய்யப்பட்டு சுங்கம் மூலம் ஒரு இலட்சத்து 67 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# இந்திரதாச ஹெட்டியாராச்சி காலமானார்

கொழும்பு , ஜன.13
முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான இந்திரதாச ஹெட்டியாராச்சி தனது 99 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார். நாட்டின் மிகவும் வயதான அரசியல்வாதிகளில் ஒருவராக அவர் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இந்தியப் பிரஜை சடலமாக மீட்பு

கொழும்பு, ஜன. 13
இலங்கையில் தவறான முடிவெடுத்த நிலையில், இந்தியப் பிரஜையொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரிந்த இந்தியப் பிரஜை ஒருவரே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் சீதுவைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - மார்கழி - 30
14.01.2025
சுபநேரம் : 11.04 - 12.34
ராகுகாலம் : 03.34 - 05.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்ணாம்புக்கற்கள் அகழ்வுகள்; தமிழ்த்தேசியக் குரல்கள் மௌனம்

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு ஆதங்கம்

யாழ்ப்பாணம்,ஜன.13

**யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீரையே எதிர்காலத்தில் இல்லாமல் செய்யக்கூடிய சுண்ணாம்புக்கல் அகழ்வு தொடர்பாகத் தமிழ்த்தேசியத் தளத்திலிருந்து ஏன் இதுவரை பலமான எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்படவில்லை? என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்புக் கேள்வி எழுப்பியுள்ளது.**

இதுதொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

யாழ்.குடாநாட்டிலிருந்து சுண்ணக்கற்கள் அதிகளவில் அகழ்ந்தெடுக்கப்பட்டு வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன. இதற்காக இங்கு பெரிய குழிகள் தோண்டப்படுவதால் நிலத்தடி நீர் உவராகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியம் பேசும் சட்டப் புலத்தில் உள்ளோர் வடக்கின் வளங்கள் கேள்விக்குறியாகும் நிலை பற்றி மௌனம் காக்கின்றமை கவலையளிக்கின்றது. இதற்கு எதிராக இதுவரை பலமான எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்படவில்லை. நிலத்தையும், நீரையும் இழந்தால் இந்த மண்ணில் தமிழ்த்தேசியம் கதைக்க யார் எஞ்சுவர்? எனவே இனியும் இந்தச் செயற்பாட்டுக்குத் துணைபோகாது எமது வளங்களைக் காப்பதற்கு எதிர்த்துப் போராடவேண்டும்- என்றுள்ளது. (ச-66-33)



# பொங்கல் பொருள்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம் , ஜன. 13

தைப்பொங்கலை முன்னிட்டு நல்லூர் நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினரால் 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான பொங்கல் பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-22,66)

சாவகச்சேரிக் குடும்ப முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலைவிழாவும் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி யின் பிரதான மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. (ச-இ)



# வாளுடன் 'கெத்து' காட்டிய சிறுவனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 13

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் வாளுடன் கைதுசெய்யப்பட்ட 17 வயதுடைய சிறுவனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சிறுவன் ரிக்ரொக்கில் வாளுடன் காணொலியொன்றை பதிவிட்டுள்ளார்.

இந்தப் பதிவு தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சுழிபுரம் பெரியபுலோ பகுதியில் வைத்து குறித்த சிறுவனை நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். சந்தேகநபரை நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

# திருமறைக்கலாமன்ற பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 13

திருமறைக்கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா நாளை 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது.

இல.238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் பணியகத்தில் காலை 5.30 மணிக்கு பொங்கல் விழாவும் அதனைத் தொடர்ந்து இல.17 ,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞான சுரபி தியான இல்லத்தில் காலை 7 மணிக்கு பண்பாட்டு வழிபாடும் இடம்பெறவுள்ளன.

வழமையாகப் பொங்கல் தினத்தன்று மாலையில் இடம்பெறும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறாது.

அதற்குப் பதிலாக எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் கலைநிகழ்வுகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)

# வாகனம் மோதியதில் லான்ட்மாஸ்ரர் விபத்து


## ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 13

விறகு ஏற்றிவந்த லான்ட் மாஸ்ரரைப் பின்னால் வந்த வாகனமொன்று மோதியதில் லான்ட் மாஸ்ரர் அருகிலிருந்த மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்து நேற்று அதிகாலை ஏ-9 வீதியில் நுணாவில் மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. விபத்தில் லான்ட் மாஸ்ரர் சாரதி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற வாகனம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-28)



கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் நோயாளர் நலன் புரிச்சங்கம், வல்வெட்டி நலன்புரிச்சங்கம் (கனடா) மற்றும் நிழல்கள் அமைப்பு (கனடா) ஆகியவற்றின் நிதியனுசரணையில் தெரிவுசெய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு மாவட்ட மருத்துவமனை இளைப்பாறும் மண்டபத்தில் வைத்து பொங்கல் பானைகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25, 214)



# 'விருத்தமழை' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.13

ஜேர்மன் வாழ் கவிஞர் பாவலர்மணி நகுலா சிவநாதனின் 'விருத்தமழை' நூல் வெளியீடு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிகக் கற்கைகள் பீடப் பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு யோகம்மா கலைக்கூட இயக்குநர் குமாரு யோகேஸ்வரன், கௌரவ விருந்தினராக 'கமம்' நாவலாசிரியர் கோபிகை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீட இந்து மெய்யியல் துறை விரிவுரையாளர் ரி.செல்வமனோகரன் நிகழ்த்துவார். நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா நூலை வெளியிட்டு வைக்க தமிழாசிரியர் கவிஞர் முல்லைத்தீபன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றுவார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் றோட்டரிக் கழகத்தினால் புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கிவைக்கப்பட்டன. தம்பையா ரமேஷ் என்பவரின் நிதியுதவியுடன் அவை கையளிக்கப்பட்டன. (ச- 25 )

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.13

யு.என்.எப்.பி.ஏ. நிறுவனத்தின் செயற்றிட்டத்தை யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர் ந. தயாபரன், யு.என்.எப்.பி.ஏ. நிறுவனத் திட்ட ஆய்வாளர் திருமதி யசாரா நதானியேல் மற்றும் திட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 66, 27)





## 'பசியில்லாத் தேசம்' மன்னாரில் உதயம்

மன்னார், ஜன.13

'பசியில்லாத் தேசம்' அமைப்பின் மன்னார் மாவட்டத்துக்கான பிரதான கிளை, அமைப்பின் இணைப்பாளர் சதீஸ் தலைமையில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன் மன்னார் நகர்ப் பிரதேச செயலாளர் ம.பிரதீப் உள்ளிட்டோர் இணைந்து பிரதான கிளையை ஆரம்பித்துவைத்தனர். இதன்போது தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக விருந்தினர்களால் உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-45-213)



## தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.13

சிவத்தமிழ் பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழா, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், தெல்லிப்பழைப் பிரதேச செயலர், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை, இந்து மதக் குருக்கள், மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ச-25, 113, 27)



நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் கருத்திட்டத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தனங்களப்புக் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் பயனாளி ஒருவருக்கு சுயதொழில் மேற்கொள்வதற்காகத் தையல் இயந்திரம் பிரதேச செயலகத்தால் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,9)

## புனரமைப்புச் செய்யப்படும் மன்னார் சிறுவர் பூங்கா

மன்னார், ஜன.13

மன்னார் நகரசபைச் செயலாளரின் வழிகாட்டலுக்கமைய மன்னார் நகர்ப் பகுதியில் உள்ள சிறுவர் பூங்காவை மீள்புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக குறித்த சிறுவர் பூங்கா புனரமைக்கப்படாமல் காணப்பட்ட நிலையில் நகரசபையின் 2024 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் பூங்காவானது புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபா செலவில் சிறுவர் பூங்கா புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இம்மாத இறுதியில் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,213)




வலிகாமம் வடக்குப் பிரதேசசபை நூலகங்களின் ஏற்பாட்டில், தேசிய வாசிப்பு மாத நிறைவு நிகழ்வு பன்னாலையில் அண்மையில் நடைபெற்றது. பிரதேச சபைச் செயலாளர் சு. சுதர்ஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஸ்ரீவர்ணன் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செஞ்சொற் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 02 . 1936



மறைவு
12 . 01 . 2025

## அமரர் செல்லத்துரை தில்லையம்பலம்

யாழ் நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் திருநகர் யோகபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் அனிஞ்சியன்குளம் மல்லாவியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தில்லையம்பலம் (முன்னாள் வர்த்தகர்-மல்லாவி) அவர்கள் நேற்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் (ஓய்வு பெற்ற அதிபர்), அருணாச்சலம் மற்றும் துரைசிங்கம், காலஞ்சென்ற சிவமணி மற்றும் கமலாவதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்மா, குமாரசாமி (ஓய்வு பெற்ற அதிபர்), கணபதிப்பிள்ளை, இலட்சுமி மற்றும் வேலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் விக்னேஸ்வரன் (மோகன்), புவனேஸ்வரி (லலிதா ஓய்வு பெற்ற ஆசிரியர் - மு/ யோகபுரம் ம.வி) சதானந்தம் (சந்திரன்), தயானந்தம் (தயா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமலா, யோகானந்தராசா (கோட்டக் கல்விப் பணிப்பாளர்-துணுக்காய்), தோகைநாயகி (ஆசிரியை-கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்) கலாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்சன் (பிரதீபன்), உசாளினி (பிரான்ஸ்), பிரதீப் (கனடா), பிரபாளினி (கனடா), தேனுஜா (லண்டன்), கஜனுஜா (லண்டன்), கானுஜா (மாணவி -மொறட்டுவ பல்கலைக்கழகம்), அகவளவன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), அகவதனன், அகப்பிரியன் (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), அர்ச்சிகன் (பிரான்ஸ்), அக்சயன் (பிரான்ஸ்), துஷாந்தினி, நிருஜன் (பிரான்ஸ்), சிவரஞ்சன் (கனடா), நிதுஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அகானா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் திருநகர் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
சதானந்தம் (சந்திரன்)-077 200 4384
யோகானந்தராசா (யோகன்)- 077 789 3799
தயானந்தம் - +33 652377697
தர்சன்-077 654 3616

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2270) P-1

# போலி விசாவுடன் யாழ்.இளைஞன் கைது

கொழும்பு, ஜன. 13
போலி விசாவைப் பயன்படுத்தி ஜேர்மனிக்குச் செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் எல்லைக் கண்காணிப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
குறித்த இளைஞர் யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## பணிப்பெண் தேவை

யாழ்நகரில் உள்ள சிறிய நடுத்தர குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண்தேவை.

077 327 6502

(cs. 57193) (N-1)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 2025.01.19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(cs.29576) (N-1)

இணைச் செயலாளர்.

# கிருஸ்ணா அடைவு கடை

பதிவு இல. J/ DS / BR / 472

மேற் குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2024 ஆம் ஆண்டு (31.03.2024) இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு (28.02.2025) முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 28.02.2025 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு** : 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் (2024.02.28) திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

இல. 370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311 / 021 222 5180
077 080 4656

உரிமையாளர்,
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
021 222 5046

(cs.57169) (N-1)

# மரண அறிவித்தல்



## அருளானந்தம் வசந்தாதேவி

வேலணையைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டி ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட அருளானந்தம் வசந்தாதேவி கடந்த (10.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலகுபிள்ளை - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், மல்லாகத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதியரின் மருமகளும், அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், தவமணிதேவி (கந்தசாமி), அருட்செல்வம் (ராஜேஸ்வரி), பஞ்சலிங்கம் (சரோஜினிதேவி), காந்திமலர் (சண்முகநாதன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜீவதர்சன், போஜினி, மயூரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குணாளினி, சசீதரன், அபிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜினி, ஜீசிசன், ராகல்வியா, ஆதித்தியன், அதிரன், யாழமுதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்

(Cs 2257) N-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 04 . 1940



மறைவு
12 . 01 . 2025

## சபாரத்தினம் சண்முகலிங்கம்
## (செல்லம்மான்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, கரணவாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சண்முகலிங்கம் (செல்லம்மான்) நேற்று (12.01.2025) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சீதாலட்சுமியின் அன்புக் கணவரும், தாரணி (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), தர்ஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசதுரை, காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் மனோன்மணி, அன்னலட்சுமி (பிரான்ஸ்), அருந்தவமணி, சிவகுருநாதன் (பிரான்ஸ்), குணபாலசிங்கம், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இ.நீலாம்பாள், பா.கமலேஸ்வரி, காலஞ்சென்ற சி.அருந்தவநாதன் மற்றும் தா.கைலைநாதன், வ.க.துரைசிங்கம் (J.P) , சி. இந்துமதி, கு.அன்னலட்சுமி, காலஞ்சென்ற பா.தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2025) திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 670 1622 / 076 102 5809

(Cs 57190) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாருக்கு வேகமானிகள்

கொழும்பு, ஜன.13
அதிக வேகத்துடன் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண 91 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 30 வேகமானிகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.
அமெரிக்கத் தயாரிப்பிலான வேகமானிகளே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகபேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# இந்திய இழுவைப்படகுகள் முல்லைக்கடலில் அத்துமீறல்

**முல்லைத்தீவு, ஜன. 13**
**முல்லைத்தீவுக் கடலைத் தற்போது இந்திய இழுவைப்படகுகள் ஆக்கிரமித்து எங்கள் வளங்களைச் சூறையாடிச் செல்வதாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் சம்மேளதலைவர் ம.அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
முல்லைத்தீவு மாவட்டக் கடலை இந்திய இழுவைப்படகுகள் ஆக்கிரமித்து வருகின்றன. இதனால் எமது மீனவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.
பகலில் தூரத்தில் நிற்கும் இந்திய இழுவைப் படகுகள் இரவு நேரங்களில் கரையில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்துக்குள் வருகின்றன. இந்திய இழுவைப்படகு வருகை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.
தற்போதுதான் முல்லைத்தீவு மாவட்டக் கடலில் மீன்பிடி, இறால் சீசன்கள் ஆரம்பித்துள்ளன. இந்நிலையில் இந்திய இழுவைப் படகுகள் உள்நுழைந்து எமது வளத்தைச் சூறையாடிச் செல்வதால் எங்கள் வளமும் தொழிலும் பாதிக்கப்படுகின்றன.
இந்தத் தொழிலில் எங்கள் மீனவர்கள் வங்கிகளில் கடனைப் பெற்றும் நகைகளை அடைவுவைத்து ஈடுபடுகிறார்கள்.
எனவே, இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலை அரசாங்கம் முழுமையாகத் தடை செய்யவேண்டும் - என்றார். (ச-19)

## குடும்பநல அலுவலர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஜன. 13
குடும்பநல சுகாதாரச் சேவைத் துறையில் தற்போது 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அதன் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.
குடும்பநல உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக தற்போது சேவையில் உள்ள குடும்பநல உத்தியோகத்தர்கள், பல சுகாதாரப் பிரிவுகளிலும் பதில் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் குடும்பநல அதிகாரிகளின் சேவை பெரும் பங்கு வகிக்கின்றது. ஆகையால் தற்போது நிலவும் குடும்பநல உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

## மஹிந்தவின் பெயர் நீக்கம்

கொழும்பு, ஜன. 13
ஹோமாகம தியகம சர்வதேச மைதானத்திலிருந்து மஹிந்த ராஜபக்சவின் பெயரை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரவை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்சவின் பெயரில் மைதானம் காணப்பட்டால் எந்தத் தனியார் துறையினரும் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள் எனக் கருதியே மஹிந்த ராஜபக்சவின் பெயரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# சி.ஐ.டி.யின் கீழ் நிதிக்குற்றப்பிரிவு

யாழ்ப்பாணம், ஜன. 13
கடுமையான நிதிக் குற்றங்களை விசாரிப்பதற்காக 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்க காலத்தில் அமைக்கப்பட்ட நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள் ளார்.
குறித்த நிதிக்குற்றப் புலனாய்வுப்பிரிவு, சி.ஐ.டி.யின் கீழ் கொண்டுவரப்பட்டாலும், அந்தப் பிரிவுக்குத் தனியான பிரதிப் பொலிஸ் அதிபர் தலைமை தாங்குவார்.
குறித்த பிரிவின் கீழ் முன்னெடுக்கப்பட்டு நிறுத்தப் பட்டுள்ள விசாரணைகளை மீண்டும் ஆரம்பிப்பதே இதன் நோக்கமாகும். இதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும். இந்த மாத இறுதிக்குள் மாற்றங்கள் இடம்பெறும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.12.2024 வெ... ...ழமை அன்று சிவபதமடைந்த
எமது ... ...த் தலைவர்
அமரர் மார்க்கண்டு குகதாசன்
அவர்களின் வீட்டுக்கிரியைகள் ... (13.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல... ...ல் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்... அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெ... ...தியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
96, பத்திரகாளி கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
57187) J-1

## விசேட போக்குவரத்து சேவைகள்

கொழும்பு, ஜன. 13
தைப்பொங்கல் பண்டிகைக்காக போதுமான பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.
அதேவேளை தைப்பொங்கல் பண்டிகை மற்றும் வார இறுதி விடுமுறையை முன்னிட்டு, தொடருந்துத் திணைக்களம் மேலதிகமாக 4 விசேட தொடருந்துகளைச் சேவையில் இணைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## புளியின் விலை 2000/=

கொழும்பு, ஜன. 13
உள்ளூர் சந்தையில் புளிப் பற்றாக்குறை காரணமாக, ஒரு கிலோகிராம் புளியை 2 ஆயிரம் ரூபா சில்லறை விலையில் விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
அதிகபட்ச சில்லறை விலை ரூ.350-400க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கிராம் புளி தற்போது பற்றாக்குறை காரணமாக 2 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.
மார்ச் மாத இறுதியில் புளி அறுவடை முடியும் வரை இந்தப் பற்றாக்குறை தொடரும் என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமஅபிவிருத்தி கலந்துரையாடல்!

வேலணை, ஜன. 13

வடக்கு மாகாணசபையின் 2025 ஆம் ஆண்டு அபிவிருத்திக்காக வேலணைப் பிரதேச செயலகப் பிரிவின் மாதிரிக் கிராமமாக ஜே/26 புங்குடுதீவு தெற்குக் கிராமஅலுவலர் பிரிவு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாகக் கிராம அலுவலர், பிரதேசசபைச் செயலாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர், பாடசாலை அதிபர்கள், சன சமூக நிலைய உறுப்பினர்கள், கிராம மட்ட அமைப்புகள், கடற்றொழிலாளர் சங்கத் தலைவர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஜே/26 பிரிவு மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,9)






சுன்னாகம் புகையிரத நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, உடுவிலைச் சேர்ந்த ஓய்வுபெற்ற புகையிரதச் சாரதி அமரர் சா. வாமதேவனின் நினைவாகவும் சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்த அமரர் க. தில்லைநாதனின் நினைவாகவும் சுன்னாகம் சூறாவத்தை சீரடி சாயி நிறுவனத்தினரால், மேடைப் பயணிகள் இருக்கைகள் சில நன்கொடையாக வழங்கப்பட்டன. (ச-25,125)

# மாற்றுத்திறனாளர் தினமும் நூல் வெளியீட்டு நிகழ்வும்

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினமும் 'புதுப்பிரவாகம்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வும் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தின ராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் ஆகியோர் பங்கேற்றனர். (ச-22,159)





இலுவம் செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தி னரால் சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட ஜே/304 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 200 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள் வழங்கும் நிகழ்வு நிலையத்தின் தலைவர் க.விஜயவாசன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சாவகச்சேரி நகராட்சி மன்றச் செயலாளர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் நிலைய அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 159)


# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

13.01.2025

தோற்றம்
25
07
1935



மறைவு
13
01
2023

அமரர் பர்னாந்து ஜோசெப் அன்ரனி

(ஓய்வு பெற்ற அதிபர், சட்டத்தரணி, பதில் நீதவான், பிரசித்த நொத்தாரிஸ் (JPUM) (அன்ரனி மாஸ்ரர்)

உள்ளமெனும் கோயினிலே
ஊற்றெடுத்த அன்பு உள்ளம்- எம் தந்தையே
பாசத்துடனும் நேசத்துடனும்
கண்டிப்புடனும் கற்றுத் தந்தீரே- எமக்கெல்லாம்
கல்வி செல்வம் புகழ் என
மிளிரச் செய்த நீங்கள் இன்று தெய்வமானீர்கள்
நினைக்கவில்லை இன்று
ஈர் ஆண்டுகள் சென்றதென்று
அன்னையும் சேர்ந்துவிட்டார் உங்களுடனே
என்னென்றும் உங்கள் நினைவில் வாடும்

இல 44, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

[illegible]

(C/22271) P-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
11
09
1927



மறைவு
10
01
2025

## அன்னம்மா துரைச்சாமி

தாவடியை பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அன்னம்மா துரைச்சாமி கடந்த (10.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - முத்துபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி துரைச்சாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, கதிரேசு மற்றும் கனகசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரன், விக்கினேஸ்வரன், மதிவதனி, இலங்கநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும், கமலாதேவி, சகுந்தலாதேவி, சண்முகநாதன், இந்துமதி ஆகியோரின் ஆசை மாமியாரும், உமாசங்கர், உமாசாயினன், கம்ஷானந்தி, நிருஸன், ஜெகஜீவன், சுமதி, கஜந்தி, சர்விகா, காரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யனுசிகா, லஸ்மிதா, அபிநயா, ஆதித்தன், ஜெய்ஷனா, ரிஷானி, மயூரிகா, சாதுரியன், தேஜஸ்விகா, சாய்பிருந்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(Cs/57195) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப்போட்டியை முன்னிட்டு மாற்று வீதி ஒழுங்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.13

தைப்பொங்கல் தினமான நாளை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நடக்கவுள்ள பட்டப்போட்டி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள போக்குவரத்து மாற்று ஏற்பாடுகளை அறிவித்துள்ளது வல்வெட்டித்துறை நகரசபை.

நாளை நண்பகல் 12 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை காங்கேசன்துறை வீதியில் வல்லை மகளிர் கல்லூரி முன்றலில் இருந்து சோடாக்கடைச் சந்திவரையும், உடுப்பிட்டின் வீதியின் மக்கள் வங்கிச் சந்தியில் இருந்து வல்வெட்டித்துறைச் சந்திவரையும் வீதி தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும்.

காங்கேசன்துறை வீதியூடாகப் பருத்தித்துறைக்குப் பயணிப்போர் பொலிகண்டிச் சந்தியூடாகத் திரும்பி நவிண்டில் சந்தியூடாகச் சென்று உடுப்பிட்டி வீதியூடாகதொண்டைமானாறுச்சந்திசென்று பயணிக்கமுடியும். காங்கேசன்துறை வீதியூடாக யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்குப் பயணிப்போரும் இவ்வாறே பயணிக்கவேண்டும்.

பட்டப்போட்டியைக் காண பருத்தித்துறைப் பகுதியில் இருந்து வருவோர் வல்வை மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும், உடுப்பிட்டி வீதியால் வரும் மக்கள் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்திலும், தொண்டைமனாறுப் பகுதியில் இருந்து வருவோர் சிதம்பராக் கல்லூரி மைதானத்திலும் வாகனங்களை நிறுத்தவேண்டும்.

தற்காலிகமாக வீதி மூடப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் நண்பகல் 12 மணிக்கு முன்னதாகத் தங்கள் பயணத்தேவைகளை நிறைவு செய்து ஒத்துழைக்கவேண்டும் என்று கோருகின்றோம். தற்காலிகமாக மூடப்பட்டு வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோறுக்கு எதிராகப் பொலிஸாரின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படும். வீதியோரங்களில் எந்தவொரு வியாபார நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படாது. வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவோர் நகரசபையில் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொண்டு அனுமதி பெறவேண்டும். நகரசபையால் மேற்கொள்ளப்படும் சுகாதார நடைமுறைகளைப் பொதுமக்கள் உரியவாறு பின்பற்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோருகின்றோம் என நகரசபைச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-125)

## கடலுக்குச்...

ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அவர் ஊர்காவற்றுறை மருத்துமவனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆயினும் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்தவரின் சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அ-எ-27)

## அநுரவின்...

முதலீடு, வலுசக்தி, மீன்பிடி, சுற்றுலா மற்றும் பொருளாதாரம் என்பவற்றை மையப்படுத்தியதாகவே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமையும் என அறியமுடிகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கான சீனாவின் உதவி, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சீனா வழங்கும் ஆதரவு ஆகிய விடயங்கள் தொடர்பிலும் இந்தப் பயணத்தின்போது கலந்துரையாடப்படவுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை 14 ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் செய்து அங்கு 17 ஆம் திகதிவரை பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். இந்தப் பயணத்தில் சீன ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சீன சபாநாயகர் ஆகியோருடன் ஜனாதிபதி அநுர சந்திப்புகளையும் நடத்தவுள்ளார். (அ-எ-44-6)

## மேற்கு...

திஸாநாயக்கவின் சீனப் பயணம் தொடர்பில் டில்லி மற்றும் வொஷிங்டன் கழுகுப்பார்வை செலுத்தியுள்ள நிலையிலேயே இந்த அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக அநுர இந்தியா சென்றிருந்தார். இரண்டாவது பயணமாக சீனா செல்லவுள்ளார். இந்த நிலையில் அமெரிக்கா, கனடா மற்றும் மேற்குலக நாடுகளிடமிருந்தும் அவருக்கு அழைப்புகள் வந்துள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது. (அ-எ-44)

## கஞ்சாவுடன்...

மையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று அதிகாலை ஒருவர் திருநெல்வேலி, தபால்பெட்டிச் சந்திப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் விசுவமடுவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், சந்நேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-26-125)

## தமிழக...

இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இரு விசைப்படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தமிழ்நாடு, இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காகக் கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள்நீதிமன்றில்முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26-113-23)

## இந்திய...

மீனவர்கள் 8 பேர் நேற்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் இரு விசைப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதையடுத்தே, தமிழக முதலமைச்சர், இந்திய வெளிவிவகார அமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 8 பேர் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க வலுவான மற்றும் பயனுள்ள இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்துகின்றோம் என்று தமிழக முதலமைச்சர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## கடற்றொழில்...

துள்ளார் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முல்லைத்தீவில் மியான்மர் அகதிகளுடன் படகு ஒதுங்கும்வரையில் கடற்படையினருக்கு அது தெரியாது. வெளிநாட்டவர்கள் எமது கடலில் என்ன செய்கின்றார்கள் என்று அவதானிக்கமுடியாத நிலையில் இருக்கின்றனர். வெளிநாட்டுப் பிரஜைகள் சிலர் தொண்டைமானாறு கடற்கரையில் நின்று ட்ரோன் மூலம் காணொலி பதிவு செய்கின்றனர். அவர்கள் எதற்காக அவ்வாறு செய்கின்றனர் என்பதும் தெரியாது.

அண்மையில் கடற்றொழில் அமைச்சர் கருத்துத் தெரிவித்தபோது கடற்றொழில் தொடர்பான புதிய சட்டம் கொண்டுவரப்படும்போது ஐரோப்பிய நாடுகளுடன் அது தொடர்பாகக் கலந்துரையாடப்படும் என்று கூறியிருந்தார். இது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளுக்கு எமது கடலைக் கூறுபோட்டு விற்கப்போகின்றார்களா என்ற அச்சம் எழுந்திருக்கின்றது.

கடற்றொழில் தொடர்பாகப் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுங்கள். கொண்டுவரப்பட்ட சட்டங்களைச் சரியாக நடைமுறைப்படுத்துவதே தூய இலங்கை. சுற்றறிக்கைகளை வெளியிடுவதால் மட்டும் தூய இலங்கை ஆகிவிடாது - என்றார். (அ-எ-26)

## கச்சானை...

யுள்ளது. அதன்பின்னர் குழந்தை இயல்புக்குத் திரும்பியது. ஆனால் நேற்று அதிகாலை குழந்தை அழுது வாந்தி எடுத்ததை அடுத்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஆயினும் நேற்று அதிகாலை குழந்தை உயிரிழந்தது.

சுவாசக்குழாயில் கச்சான் சிக்கியதாலேயே மரணம் சம்பவித்துள்ளமை உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26-23)

## நிதி...

நிதி நிறுவனத்தில் அடைவு வைக்கப்பட்ட நகைகளில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று மருதங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் நிறுவனத் தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் வேறு எவருக்கேனும் தொடர்புகள் உள்ளனவா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## தேர்தல்...

கான கொடுப்பனவு பல மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ளபோதும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் கடமையாற்றியவர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்று தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதியில் முறைகேடுகள் நடந்துள்ளது என்றும், வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தற்காலிகமாகப் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனாலேயே வன்னி மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவு தாமதமாகின்றது என்றும் மாவட்டச் செயலக வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (அ-எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளுந்துக்கு உரிய விலையில்லை



வவுனியா, ஜன. 13

வவுனியா மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்று பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி மாலினி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் 2024-2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 56-50 ஹெக்ரேயர் அளவில் உளுந்துப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது உளுந்து அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் அவற்றுக்கு உரிய விலை கிடைக்காமையால் விவசாயிகள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

விலை அதிகரிக்கும் காலங்களில் அதனை விற்பனை செய்யவேண்டுமெனில் அவற்றைப் பத்திரமாக வண்டு மற்றும் பூச்சிதாக்கம் இல்லாது பாதுகாக்கவேண்டும்.

எனவே விவசாயிகளின் நலன்கருதி அரசாங்கம் உளுந்துக்கான விலை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (ச-18.110)



# கூட்டணி அமைப்பதற்கு ஐ.ம.சக்தி விசேட கூட்டம்

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பான சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

கட்சியின் கிராமிய அரசியல் செயற்பாட்டாளர்கள் பலரும் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியும் தமது கட்சியும் இணைய வேண்டும் என்பதற்குரிய சமிக்ஞையை ஐக்கிய தேசியக் கட்சி வெளிப்படுத்தியுள்ளது. இதற்காகச் சில விட்டுக்கொடுப்பு களைச் செய்வதற்கும் அந்தக் கட்சி தயார் நிலையிலுள்ளது. இந்தப் பின்புலத்திலேயே இதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி சஜித் தரப்பும் ஆராயவுள்ளது. (ச-44)

# சவுதி அரசுடன் 9 ஒப்பந்தங்கள்

கொழும்பு, ஜன. 13



சவுதிக்கும் - இலங்கைக்கும் இடையில் பல துறைகளைச் சார்ந்த 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான சவுதித் தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்குறிப்பிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்துப் பேசப்பட்டன.

அதேவேளை நிர்மாணிக்கப்பட்டு பல ஆண்டுகளாக மக்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் 500 சவுதி வீட்டுத்திட்டத்தைக் கூடியவிரைவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிவைக்குமாறு இலங்கைக்கான சவுதித் தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

# தாய்வீடு திரும்புங்கள் சுதந்திரக்கட்சி அழைப்பு

கொழும்பு, ஜன.13

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியுள்ள அனைவரும் மீண்டும் தாய்வீடு திரும்ப வேண்டும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரான துமிந்த திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

மொட்டுக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களால் தான் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, சுதந்திரக் கட்சி என்ற தாய்வீட்டில் கதவுகள் திறந்தே உள்ளன. கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் வரலாம். சுதந்திரக் கட்சியின் வாக்குகள்தான் தேசிய மக்கள் சக்திக்குச் சென்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-44)

# அலைபேசியில் மோசடி; அறுவர் கைது

புத்தளம், ஜன. 13

புத்தளம் பகுதியில் பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் தொடர்புகள் கொண்டு பண மோசடியில் ஈடுபட்ட ஆறு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட ஆறு பேரும் 18 மற்றும் 22 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

**2 வீடுகள் வாடகைக்கு உண்டு**

A9 கண்டிவீதி, மாம்பழம் சந்தியிலிருந்து 300 m தூரத்தில் 4 அறைகளுடன் மற்றும் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலிருந்து 400m தூரத்திலும் வீடுகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: கிருபா

077 306 8993, 077 308 0465 ஓனர்

**வேலையாள் தேவை**

30-50 வயதிற்குற்பட்ட ஆண் வேலையாள் கணக்காளர் வேலைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:

021 430 3354

**காணி விற்பனைக்கு**


யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 4 பரப்புக் காணி காபற் மெயின் றோட்டுடன் விற்பனைக்குண்டு.

- உடுப்பிட்டி சந்நிதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சந்நிதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்.
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வை நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தொடர்பு: 070 290 2338
076 017 1105

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 02 . 1942



மறைவு 12 . 01 . 2025

**கந்தையா இராசரத்தினம்**

சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-கண்மணி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சுந்தரம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலம்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சுகந்தி, ஜெயந்தி, காலம்சென்ற ஜெயக்குமார் மற்றும் சுகுமார், ஆனந்தி, அருந்ததி, ஸ்ரீலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராஜா, ஜெயக்குமார், சித்திரா, வக்சலா, பிறேமதாசன், சுரேஸ்குமாரன், காலம்சென்ற ஜெகதீஸ்வரன் ஆகியோரின் ஆசை மாமனாரும் சுப்பிரமணியம், விக்கினேஸ்வரி, ஜெகசோதி, காலம்சென்ற நவரட்ணம் ஆகியோரின் மூத்த சகோதரனும், சந்திராவதி காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, கணபதி, பவளமணி, காலஞ்சென்றவர்களான மகாலக்ஷ்மி, பாக்கியலக்ஷ்மி, ஸ்ரீஸ்கந்தராஜா, யோகலக்ஷ்மி, காலம்சென்ற நித்தியலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும் வினோதினி-பகீரதன், ருஷாந்தி-தசரதன், நிரோஜன்-திவ்யா, சாருஜன், ஜெரூசன்-வாகினி, ஜெர்சிகா-நிரூஜன், திவாகர், அகிஷா, ஆதுஷா, விதுஷா, அர்த்தனா, அகானா, அர்த்திகன், இனியா, இலக்கியா, இதயா, சதுர்ஷன், பிரதிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் லக்ஷ்மிதா, மதுமிதா, விஷ்வா, இலக்கியன், கல்கி, கயல், யாத்திரா, அர்ஜீனன், இராவணன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 44, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 662 2036 (சுரேஸ்குமாரன்-மருமகன்)
077 199 6642 (ஸ்ரீலக்ஷ்மி (சூட்டா- மகள்)

(CS 888) V-T

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்கள.து பணிமனையில் 13.01. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org